மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை : - **திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L.,L.L.M.,DJJJ.,Psy.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,(முழு கூடுதல் பொறுப்பு)

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி.

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 06 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ சுபகிருது வருடம் மார்கழித் திங்கள்22 ஆம் நாள்

**இடைநிலை மனு எண்.393/2022-ல்**

**அசல் வழக்கு எண். 79/2020**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா, ஆலத்தூர் கிராமம், தோப்புத்தெரு என்ற முகவரியில் வசிக்கும் வடிவேல் மகன் 51 வயதுள்ள ரமேஷ்

...மனுதாரர் /வாதி

**// எதிர்//**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா, மன்னார்குடி டவுன், அங்காளம்மன் கோவில் தெருவில் வசிக்கும் குன்னியூர் பண்ணை இல்லம் கே.எஸ்.டி எஸ்டேட் உரிமையாளரான சாம்பசிவ அய்யர் குமாரர், 65 வயதுள்ள கே.எஸ். துரைசாமி

..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது அசல் வழக்குரையுடன் தாக்கல் செய்ய இயலாத தவறுதலை மன்னித்து இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள அனுமதித்து உத்தரவிடக்கோரி உ.ந.ச. கட்டளை 7 விதி 14(3) மற்றும் பிரிவு 151 -ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 15.09.2022

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 14.10.2022

இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு கடந்த 14.10.2022ம்தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வந்த சூழ்நிலையில் கடந்த 23.12.2022ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் **திரு.**

**கதாக அருசு தாயுமானவன், திரு.V.K. கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களும்,** எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. P. பொன்னுலிங்கம்** அவர்கள் முன்னிலையாகியம், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று **06.01.2023** இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் உண்மை தன்மை, நம்பகத்தன்மை மற்றும் ஏற்கும் தன்மைக்கு உட்பட்டு இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. செலவுத்தொகை இல்லை.

2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 06-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

(S/d.A.S.Ameerdheen),
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(மு.கூ.பொ)